

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கொத்த மங்கலம் சாலையில் உள்ள ஈத்காமைதானத்தில் நடந்த ரம்ஜான் பண்டிகையின் சிறப்பு தொழுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். உடன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளிட்ட இஸ்லாமியப் பெருமக்கள் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மேற்கு ஒன்றியம் சிலம்பரத்துப்பட்டி பஸ் நிறுத்தம் அருகில் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூபாய் 4034 கோடி நிதியை தராமல் தமிழ்நாடு பொதுமக்கள் வயிற்றில் அடிக்கும் மோடி அரசைக் கண்டித்து போடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மசில மரத்துப் பட்டி கிளைச் செயலாளர் கணேசன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான், அவைத்தலைவர் பாண்டுரங்கன், செல்வம், ராஜாமணி, கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# செஞ்சியில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி !

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, ஏப்.01-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃத்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத்அப்துல் மஜித் பாபு தலைமை தாங்கினார். சக்தி ரவிச்சந்திரன், செஞ்சி புனிதமிக்கேல் ஆலயத்தின் பங்கு தந்தை அந்தோணி ராஜ், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர்முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு புனித ரமலான் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இதில் ம.தி.மு.க. மாநில துணை பொது செயலாளர் ஏ.கே.மணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில துணைச் செயலாளர் ரங்க பூபதி, மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், செஞ்சி வட்டார செயலாளர் ஆல்பர்ட் வேளாங்கண்ணி, செஞ்சி நகைக்கடை சங்கத் தலைவர் ஆதில் பாஷா, வர்த்கர் சங்கத் தலைவர் செல்வராஜ், வணிகர் சங்க தலைவர் ரப்பானி ஆதம், சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் சங்கர், துணைத் தலைவர் சுரேஷ், முன்னாள் ரோட்டரி கிளப் சங்கத் தலைவர் பாஸ்கர், நுகர் பொருள் விநியோகஸ்தர்கள் சங்க தலைவர் தேவராஜ் மணிகண்டன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், சேது நாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர் சேகர், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், கதிரேசன், வீடுர் ரவி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜாராம், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், நாராயண மூர்த்தி, பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், நகர பேரூர் தலைவர்கள், ஒன்றிய துணை பெரும் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள், அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள்கலந்து கொள்கின்றனர். முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறினார்.

### நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோளை ஏற்று

# தச்சநல்லூரில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கப்படும் !

## நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் உறுதி!

நெல்லை, ஏப்.1-

நெல்லை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தச்சநல்லூரில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோளை ஏற்று உயர் கோபுர மின்விளக்கு அமைத்து தருவதாக நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் உறுதி அளித்துள்ளார்.

நெல்லை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தச்சநல்லூர் பகுதி 13வது வார்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோவில் உள்ளது. அந்த கோவிலுக்கும், அந்த கோவில் வாயிலாக தச்சநல்லூரை நோக்கி தினமும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன.

கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்பு உயர் கோபுர மின் விளக்கு அமைத்து தருவதற்காக ஊர் பொது மக்களும், பக்தர்களும், நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோவில் அறங்காவலர், வேதமூர்த்தி, மந்திர மூர்த்தி கோவில் நிர்வாகிகள் என அனைவரும் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியனிடம் கோரிக்கை மனு வழங்கினர். மேலும் இது குறித்த கோரிக்கை மனுவில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கையெழுத்திட்டு வழங்கியுள்ளனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கழக முதன்மை செயலாளர் கே.என். நேரு, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி,

இந்த மனுவினை மாநகர செயலாளர் பெற்றுக்கொண்டு அந்த மனு மீது துரித நடவடிக்கை எடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ்'யை சந்தித்து எம்.பி தொகுதி நிதியில் இருந்து வழங்கும்படி மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வலியுறுத்தி கோரிக்கை மனு வழங்கியுள்ளார்.

அதன்படி நெல்லை ராபர்ட் புரூஸ் எம்.பி. ஓரிரு மாதங்களில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்து தருவதாக உறுதி அளித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், 41வது வட்ட செயலாளர் கிங் பாலா, மாநகர அணி துணை அமைப்பாளர்கள் ஷெட்டி, முருகன், சக்தி வேல், அந்தோணி ராஜ், அன்னராஜா, இளைஞர் அணியினர் மணிகண்டன், அய்யம் பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் சொக்கநாத புரத்தில் கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.கென்னடி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### தொகுதி மறுவரையறை சதிக்கு எதிராக சென்னையில்

# 58 கட்சிகள் முதல்வர் தலைமையில் கலந்துகொண்டது வரலாற்று நிகழ்வு!

## நெல்லையில் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பேட்டி!



நெல்லை, ஏப்.1-

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் மாவட்ட கழக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை என்பது நமது தலையின் மீது தொங்கும் கத்தியைப் போன்றது. தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை குறைத்து நமது அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மாநிலத்தின் உரிமைகளின் மீதும் மக்களின் நலன்களின் மீதும் நேரடியாக தொடுக்கப்படும் தாக்குதலாகும்.

திராவிட மாடல் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாய் நமது தமிழ்நாட்டின் நலனுக்காக மட்டுமின்றி தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களுக்காகவும் முன்னணியில் நின்று போராடி வருகிறார். முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மார்ச் 5 ஆம் தேதி ஒன்றிய பா.ஜ.க அரசின் தொகுதி மறுவரையறை சதிக்கு எதிராக சென்னையில் கூட்டப்பட்ட அனைத்து கட்சி கூட்டத்தில் அழைக்கப்பட்ட 63 கட்சிகளில் 58 அரசியல் கட்சிகள் கலந்து கொண்டு முதலமைச்சரின் அவர்களின் முடிவை ஆதரித்து ஒரே குரலில் ஒன்றிய பா.ஜ.க அரசின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்

மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப் பட்டால் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட 7 மாநிலங்களுக்கு அது அநீதியாக அமையும் எம்.பிக்களின் எண்ணிக்கை குறையும், அதனால் அரசியல் பிரதிநிதித்துவமும் குறையும். மக்கள் தொகை கட்டுப்பாட்டை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களை இந்த தொகுதி மறுவரையறை தண்டிக்கிறது.

இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது தேசியக் கொள்கைகளை பின்பற்றிய மாநிலங்கள் நியாயமாக பாராட்டப்பட வேண்டும். மாறாக தண்டிக்கப்படக்கூடாது. இத்தகைய முயற்சி ஆபத்தான முன்னுதாரண மாக அமையும். நாடாளுமன்ற தொகுதிகளின் இழப்பு என்பது வெறும் எண்ணிக்கை குறைவு மட்டும் அல்ல. இது நமது அரசியல் பலம், உரிமைகள் மற்றும் நம் எதிர்காலத்தையே வீழ்ச்சி பாதையில் கொண்டு சென்று விடும் குறைவான அரசியல் பிரதிநிதிகள் இருந்தால் நமது மாநிலங்கள் நியாயமான நிதியை பெறுவதிலும் கொள்கைகளை பாதுகாப்பதிலும், மக்களின் தேவைகளை ஒன்றிய அரசிடம் கேட்டுப் பெறுவதிலும் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பா.ஜ.க தலைமையிலான ஒன்றிய அரசும் அதன் அமைச்சர்களும் தொகுதி மறுவரையறை பிரச்சனையில் அமைதியாக உள்ளனர். தமிழ்நாட்டிற்கு எந்த உறுதி மொழிகளையும் இதுவரை வழங்கவில்லை. மாறாக பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரின் தெளிவற்ற சப்பைக்கட்டு பேச்சுகளை நம்ப சொல்கின்றனர்.

இதுகுறித்து தமிழக எம்.பி.க்களை நாடாளுமன்றத்தில் பேசக்கூட அனுமதிப்பதில்லை தமிழ்நாட்டு மக்களை நாகரீகம் அற்றவர்கள் என்று ஒன்றிய அமைச்சர் கூறிய கருத்து பா.ஜ.க.வினர், நம்மைப் பற்றிய இழிவான பார்வையை வெளிப்படுத்துகிறது. இப்போதே இந்த நிலைமை என்றால் நமது நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டால் எவ்வளவு அலட்சியப்படுத்துவார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தச் சூழலில் நமது திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் தமிழ்நாடு உட்பட தொகுதி மறுவறையால் பாதிக்கப்படவிற்கும் மாநிலங்களை ஒருங்கிணைத்து உறுதியாக எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் இந்த பிரச்சனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

வரப்போகும் தொகுதி மறு வரையறை ஒரு பெரும் சவாலை முன்வைக்கிறது. பொது விவாதம் வலுவாக இருந்தால்தான் இந்த பேராபத்திலிருந்து தற்காத்து கொள்ளும் போராட்டமும் வலுவடையும் தமிழ்நாட்டோடு பாதிக்கப்படும் பிற மாநிலங்களும் ஒன்றிணைந்துள்ளன. இப்போது அனைத்து ஜனநாயக சக்திகளும் நியாயமான பிரதிநிதித்து வத்திற்கான இந்த போராட்டத்தில் எங்களுடன் நிற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். ஒன்றிய அரசு உரிமைகளை பாதிக்காத தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள வேண்டும் இல்லை என்றால் தொகுதி மறுவரையறையை அடுத்த 25 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும். அதுவரை இந்த போராட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்களோடு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டும். அப்போதுதான் நமது உரிமைகளை பாதுகாக்க முடியும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் வாவர் பள்ளி அருகில் உள்ள ஜின்னா திடலில் ரமலான் பெருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு தொழுகையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்று இஸ்லாமிய மக்களுடன் கலந்து கொண்டு பிரார்த்தனை மேற்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சாத்தூர் பாலகிருஷ்ணன்**

**ஏப்ரல் 1 (1976)**



**சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.**

**"சாத்தூர் பாலகிருஷ்ணன் – அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!" என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**